திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய

மழைப் பதிகம்



மதுரை ஆதீன வெளியீடு

மதுரை ஆதீனம்

292 ஆவது குருமகாசன்னிதானம்



"லோககுரு"

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

உ

அன்பே சிவம்

என் கடன் பணி செய்து கிடப்பதே

"குலசேகரன்பட்டினம்

ஆன்மிக அருட்பணி மன்றத்" தின் நிறுவனர்

திரு. சி. சிவசுப்பிரமணியன் அவர்களின் முயற்சியால்

அருள்மிகு அறம் வளர்த்த நாயகி

அருள்மிகு காஞ்சிவிசய கச்சிகொண்ட பாண்டீச்வரர்

திருக்கோயிலில், ஈசுவர ஆண்டு ஆனிமாதம் 22-ஆம் தேதி

ஞாயிற்றுக்கிழமை (6.7.97) அன்று நடைபெற்ற

1008 திருவிளக்கு வழிபாடு

விழாவை முன்னிட்டு

மதுரை ஆதீனம் 292 - ஆவது குருமகாசன்னிதானம்

லோககுரு

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

அவர்களின் ஆசியுடன் வெளியிடப்பட்டது.

சிவபெருமான் பேரருள்!

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிய

மழைப் பதிகம்

(திருவையாறு - பண்: மேகராகக் குறிஞ்சி)

திருச்சிற்றம்பலம்

புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேலன்
றருள்செய்வான் அமருங் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே 1

விடலேறு படநாகம் அரைக்கசைத்து
வெற்பரையன் பாவை யோடும்
அடலேறொன் றதுவேறி அஞ்சொலீர்
பலிஎன்னும் அடிகள் கோயில்

கடலேறித் திரைமோதிக் காவிரியின்
உடன்வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கம் செழுமுத்தங்கு
ஈன்றலைக்கும் திருவை யாறே. 2

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங் கோயில்
கொங்காளப் பொழில் நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல் நீங்கிச்
செங்கால்நல் வெண்குருகு பைங்கானல்
இரைதேரும் திருவையாறே 3

ஊன்பாயும் முடைதலைகொண் டூரூரின்
பலிக்குழல்வார் உமையாள் பங்கர்
தான்பாயும் விடையேறும் சங்கரனார்
தழலுருவர் தங்குங் கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாய செழுங்கமல
மொட்டலரும் திருவை யாறே. 4

நீரோடு கூவிளமும் நிலாமதியும்
வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங் கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார் வீதித்
தேரோடும் அரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலும் திருவை யாறே. 5

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்த னாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங் கோயில்
காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடும் திருவை யாறே. 6

நின்றுலா நெடுவிசும்பின் நெருக்கிவரு
புரமூன்றும் நீள்வாய் அம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங் கோயில்

குன்றெலாம் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாச மல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு
கண்வளரும் திருவையாறே 7

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
அரக்கர்கோன் தலைகள் பத்தும்
மஞ்சாடு தோள்நெரிய அடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர் கோயில்
இஞ்சாய இளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி இரிந்தங் கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியும் திருவை யாறே 8

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிக அகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாத
வகை நின்றான் மன்னுங் கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தின் நின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே. 9

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியரும் குணமொன் றில்லா
மிண்டாடும் மிண்டருரை கேளாதே
ஆளாமின் மேவித் தொண்டீர்
எண்தோளர் முக்கண்ணர் எம்ஈசர்
இறைவரினி தமருங் கோவில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்கும் திருவை யாறே. 10

அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம்
பெருமானை அந்தண் காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவு பாடல்
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால்
ஈசனடி ஏத்து வார்கள்
தன்னிசையோ டமருலகில் தவநெறிசென்
றெய்துவார் தாழா தன்றே. 11

திருச்சிற்றம்பலம்

நமது மதுரை ஆதீனச் சீடர்களில் சிலர்

1. வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகள்
2. இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி
3. பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன்
4. அம்மன்னனின் துணைவி மங்கையர்க்கரசி
5. மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய
   பாண்டித்துரைத் தேவர்
6. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
7. நாயக்க மன்னரான விசுவநாத வேந்தன்
8. முதலமைச்சர் அரியநாயகி முதலி
9. சென்னை பச்சையப்பன் கல்லூரியை
   நிறுவிய பச்சையப்ப முதலி
10. முதலமைச்சர் குலச்சிறையார்
11. ஆர்.எஸ். நாயுடு பார் - அட் - லா
12. துறையூர் வீரமார்த்தாண்ட மன்னன்
13. இந்தியாவை ஆண்ட கவர்னர்
    ஜெனரல்கள் அட்லி, டப்பரின்
15. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை

மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்கள் நான்கு!

1. அருள்மிகு சாட்சிநாத சுவாமி திருக்கோயில்
திருப்புறம்பியம், கும்பகோணம் வட்டம்
தஞ்சை மாவட்டம்

2. அருள்மிகு அக்னீஸ்வர சுவாமி திருக்கோயில்
கஞ்சனூர், கும்பகோணம் வட்டம்
தஞ்சை மாவட்டம்

3. அருள்மிகு கைச்சின்னேஸ்வர சுவாமி திருக்கோயில்
கச்சனம், திருத்துறைப்பூண்டி வட்டம்,
தஞ்சை மாவட்டம்

4. அருள்மிகு பன்னகா பரமேஸ்வர சுவாமி திருக்கோயில்
பன்னத்தெரு, திருத்துறைப்பூண்டி வட்டம்
தஞ்சை மாவட்டம்



குருமகாசன்னிதானமும் அவரது பூர்வாசிரம தந்தையும்

292 - ஆவது குருமகாசன்னிதானம் அவர்களின் அருள்மொழிகளில் சில

பக்திக்கு முன்னதாகப் பண்பாடு. ஒரு மனிதனுக்குப் பண்பாடு இருக்குமானால் 'பக்தி' தானாகவே உருவாகிவிடும். பண்பாடு என்றால், பெரியோரிடத்தில் பணிவு, பெரியோர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல், பிறர் துன்பங்களைக் கண்டு இரக்கப்படுதல், எக்காரணத்தைக் கொண்டும், பிறருக்குத் தீங்கு எண்ணாமை, மனித வாழ்வின் நிலையற்ற தன்மையை எண்ணிப் பார்த்து, மனிதத் தன்மையுடன் வாழ்வது, இவையே 'பண்பாடு' என்பதாகும். ஆக, பண்பாட்டிற்கு இவ்வளவு தன்மைகள் உண்டு. இவைகளெல்லாம் கொண்டவனே 'உண்மையான பக்தியுள்ள மனிதன்' ஆவான்.

R.M.K. PRINTOGRAPHS. NGL., Ph: 26316